25th February 1969]

THIRU A. R. DAMODARAN : What I meant was that in other countries there were no level crossings while hon. Members here were asking for provision of warnings at these level crossings. Will the Government consider removing the level crossings provided at unnecessary places in the rural areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : லெவல் கிராசிங் இருக்கும்போதே விபத்துக்கள் ஏற்படுகின்றன. கனம் உறுப்பினர்கள் கருத்துப்படி அவைகளை எடுத்துவிட்டால் இன்னும் அதிகமாக விபத்துக்கள் ஏற்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : ரெயில்வே கிராசிங் சம்பந்தப் பட்டவரையில் ஏற்பாடு செய்வது மத்திய சர்க்கார்தானே என்று அறிய விரும்புகிறேன். இங்கே இருக்கிற சர்க்கார் அந்தக் கேட்டைத் தொடுவதற்குக் கூட முடியாது. இதில் எப்படி இவர்கள் தலையிடமுடியும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கனம் உறுப்பினர் சொல்கிற கருத்து சரியானது.

South Arcot Co-operative Motor Transport Society for Ex-servicemen, Cuddalore

* 46 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any report has been received by the Registrar of Co-operative Societies from the President of the Board of Directors of the South Arcot Co-operative Motor Transport Society for Ex-servicemen, Cuddalore, regarding the working of the society, suggesting the supersession of the Board and the appointment of a Special Officer in view of the bad financial condition of the Society;

(*b*) whether it is a fact that a sum of Rs. 1,26,000 has been advanced as a loan by the Government to this society ; and

(*c*) whether the financial condition of the Society is sound enough to repay this loan, in view of the recurring losses, it has sustained during the past five years?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஆம். இச்சங்கத்துக்கு இவ்வரசாங்கம் ரூ. 2,80,000 வரை கடன் வழங்கியுள்ளது.

(உ) இச்சங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக விரயத்தில் இயங்கி வருகிறது என்பது சரியன்று. 1964-65 வரை இச்சங்கம் ஆதாயத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது. அதன்பின்னர் அது விரயத்தில் செயல்பட்டு வருகிறது. அண்மைக்கால ஐந்தொகையை ஒட்டி வசூலிக்கத்தக்க சொத்துக்களையும் கொடுக்கவேண்டிய பொறுப்புகளையும் கணக்கிட்டபின்பு தான் இச்சங்கத்தின் நிதி நிலையைச் சரிவர மதிப்பிடமுடியும். எனவே அரசாங்கக் கடனை வசூலிக்க இயலாதெனச் சொல்லுவதற்கில்லை.

[25th February 1969

THIRU A. R. DAMODARAN : May I know what are the assets and liabilities of this society according to the latest statements that may be available with the Government?

THE HON. THIRU M. MUTHUSWAMY : No, Sir.

THIRU A. R. DAMODARAN : Sir, how do the Government then say that the society is in a position to repay the interest on the loans if they have not even calculated the assets and liabilities of the society?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுபற்றி தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து வந்த தகவல்படி அங்குள்ள நிர்வாகச் சீர்குலைவு தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதுபற்றிய முழுவிவரமும் தற்போதில்லை. விவரம் வேண்டுமென்றால் தனிக்கேள்வி போட்டால் சேகரிக்கமுடியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, முன்னாள் படைவீரர்கள் கூட்டுறவு சொசைடி தமிழகத்தில் எங்காவது சரியாக நடைபெறுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பல இடங்களில் நல்ல முறையில் நடைபெறுவதாக தகவல் இருக்கிறது. சில இடங்களில் நஷ்டத்தில் வேலை செய்வதற்குக் காரணம் அவற்றில் பல்வேறுபட்ட தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் தங்களின் எண்ணத்திற்கேற்ப அவர்கள் தங்கள் ஊதியத்தை ஏற்றிக்கொள்வதால் நஷ்டம் ஏற்படுகிறது. அதைப் பரிசீலித்து நல்ல தீர்வு காண்பதற்கு நஷ்டம் வருகிற இடங்களில் தனி அதிகாரிகளைப் போட்டு சீர்படுத்தப்படுகின்றன. சில சொசைடிகள் லாபத்தில் நடைபெறுகின்றன.

திரு. சா. கணேசன் : தமிழகத்தில் கூட்டுறவு அடிப்படையில் அல்லது தங்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடைபெறுகிற இந்தத் துறையில் இருக்கிறவர்கள் அல்லது நிர்வகிக்கிறவர்கள் தாங்களே ஊழியர்களாக இருப்பதால் தங்கள் சம்பளத்தை அல்லது ஊதியத்தை அடிக்கடி உயர்த்திக்கொண்டு போகிறார்கள் என்று கூறப்பட்ட கருத்து மேலே உள்ள அதிகாரிகள் கவனித்து இதற்கு வேண்டிய வரைமுறை அல்லது ஸ்கேல் மாதிரி ஒரு திட்டத்தை செய்யவில்லையா ? இப்படிப்பட்ட குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு அம்மாதிரி ஒழுங்குமுறை செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எங்கெங்கு இப்படிப்பட்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு அப்படிப்பட்ட இடங்களுக்கு சப்ரிஜிஸ்ட்ரார் நிலையில் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பொதுவாக எல்லா இடங்களுக்கும் ஊதிய விதிமுறைகளை அமைப்பதில் சட்ட சிக்கல்கள் உள்ளன.

திரு. எம். எத்திராஜுலு : கடலூர் கூட்டுறவு எக்ஸ்-சர்விஸ்மென் சங்கத்தில் இருந்து 20 கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்றும், அதில் வேலை செய்த அதிகாரிகள் மூன்று பேரை நீக்கியது சரியல்ல என்றும், அவர்களை மீண்டும் வைக்கவேண்டுமென்றும், அப்படி வைக்கத் தவறினால் 1—2—1969-ல் வேலைநிறுத்தம் செய்யமுடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். பின்னர் வேலூரிலிருந்து லேபர் ஆபீசர் வந்து சமாதானப்படுத்தி விட்டு சென்றிருக்கிறார். அப்போது 22—2—1969-க்குள் மீண்டும் அவர்கள் வேலையில் சேர்க்கப்படாவிட்டால் திரும்பவும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாக சொல்லப்படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கூட்டுறவு மூலமாகக் கொடுக்கப்படும் தொகை திரும்ப வசூலிக்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. இங்கு அங்கத்தினர் கேட்கும் தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லமுடியும்.

MR. CHAIRMAN : Questions are over.

Note.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)**

II.—ANNOUNCEMENTS.

(1) BUSINESS OF THE HOUSE.

MR. CHAIRMAN : In partial modification of the programme already announced, the Legislative Council will sit on Friday, the 28th February 1969 instead of on the 27th February 1969 and 27th February will be a holiday for Bakrid.

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

III—CALLING ATTENTION TO DELAY IN GIVING SERVICE CONNECTIONS TO PUMPSETS FOR IRRIGATION PURPOSES IN RAMANATHAPURAM DISTRICT.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது,

"பாசன காரியங்களுக்காக விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்படுதல்" என்பது.